# நமது தின கனி

காலை நாளிதழ்

NAMADHU DHINA KANI Daily Morning

Vol: 01 | Issue: 296 | 4 Pages | 29.5.2024 | Wednesday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 | Tiruppur

மலர்: 01 | இதழ்: 296 | 4 பக்கங்கள் | 29.5.2024 | புதன்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 | திருப்பூர்


## 35 பேர் பலி துரதிருஷ்டவசமான தவறு: இஸ்ரேல் பிரதமர் நேதன்யாகு



இஸ்ரேல், மே. 29

ஹமாஸ் அமைப்பினருக்கு எதிராக போர் பிரகடனம் செய்த இஸ்ரேல் ராணுவம், காசா மீது தாக்குல் நடத்தி வருகிறது. ரஃபா நகரை தவிர்த்து மற்ற பகுதிகளை தடம் தெரியாத அளவிற்கு அழித்து விட்டது. ஹமாஸ்க்கு எதிராக போர் தொடங்கியதற்கான இலக்கை எட்ட வேண்டுமென்றால் ரஃபா நகர் மீது தாக்குதல் நடத்தப்பட வேண்டும் என்று இஸ்ரேல் தெரிவித்தது.


ரஃபா மீது ராணுவ நடவடிக்கை எடுக்கப்படும் என இஸ்ரேல் அறிவித்தது. இதற்கு பெரும்பாலான நாடுகள் எதிர்ப்பு தெரிவித்து வந்தன. ஐ.நா. நீதிமன்றம் ரஃபா மீது தாக்குதல் நடத்தக்கூடாது என உத்தரவிட்டது.

இந்த நிலையில் நேற்று திடீரென ரஃபா நகர் மீது வான் தாக்குதல் நடத்தப்பட்டது. இதில் 35 பாலஸ்தீனர்கள் கொல்லப்பட்டனர்.

இந்தநிலையில்ரஃபாமீதுதாக்குதல்நடத்தப்பட்டதுதுரதிருஷ்டவசமான தவறு என இஸ்ரேல் பிரதமர் நேதன்யாகு ஒப்புக் கொண்டுள்ளார். மேலும், இது தொடர்பாக விசாரணை நடத்தப்பட்டு வருவதாக எனத் தெரிவித்துள்ளார்.

காசா மீது இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் இதுவரை 35 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பாலஸ்தீனர்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

## ஜெருசலேமில் 2,300 ஆண்டுகள் பழமையான தங்க மோதிரம் கண்டுபிடிப்பு



இஸ்ரேல், மே. 29

இஸ்ரேல் நாட்டின் ஜெருசலேமில்2,300 ஆண்டுகள் பழமையான தங்க மோதிரம் கண்டுபிடிக்கப்பட்டதாக தொல்பொருள் ஆணையம் தெரிவித்துள்ளது.

விலையுயர்ந்த சிவப்பு கல்லால் இந்த தங்க மோதிரம் அலங்கரிக்கப்பட்டுள்ளது

இதன்மூலம் ஜெருசலேமில் வாழ்ந்த பண்டைய கால மக்கள் குறிப்பிடத்தக்க செல்வாக்குடனும், செழிப்புடனும் இருந்ததை இந்த மோதிரம் உணர்த்துவதாக தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் கருத்து தெரிவித்துள்ளனர்.

## பப்புவா நியூ கினியா: நிலச்சரிவில் 2000 பேர் உயிரோடு புதைந்துள்ளனர் வெளியான அதிர்ச்சி தகவல்



பப்புவா நியூ கினியா, மே. 29

பசிபிக் பெருங்கடலின் தென் மேற்கு பகுதியில் ஆஸ்திரேலியாவுக்கு அருகே இருக்கும் தீவு நாடு பப்புவா நியூ கினியா. அங்கு சில நாட்களுக்கு முன்பு கனமழை பெய்தது. இதனால் கடந்த வெள்ளிக்கிழமை அங்குள்ள எங்கா மாகாணத்தின் காகோலாம் கிராமத்தில் திடீரென நிலச்சரிவு ஏற்பட்டு பல வீடுகள் சேதமடைந்தன. அதிகாலை 3 மணியளவில் நிலச்சரிவு ஏற்பட்டதால் வீட்டில் தூங்கிக் கொண்டிருந்த பலர் மண்ணில் புதையுண்டனர்.

இதையடுத்து அங்கு விரைந்த பேரிடர் மீட்புப்படையினர் மீட்பு பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

அதிகாலை நேரத்தில் நிலச்சரிவு ஏற்பட்டதால் பாறைகளும், மரங்களும் குடியிருப்புகள் மீது விழுந்தன. இதனால் தூங்கிக்கொண்டு இருந்த மக்கள் அதில் சிக்கினர்.

இதனால் 1200க்கும் மேற்பட்ட வீடுகள் இடிந்துள்ளதாகவும், 650க்கு மேற்பட்டோர் மண்ணில் புதையுண்டனர் என்று முதல்கட்ட தகவல் வெளியானது. இந்நிலையில், பப்புவா நியூ கினியா நாட்டில் ஏற்பட்ட பயங்கர நிலச்சரிவில் 2 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் உயிரோடு புதையுண்டதாக அந்நாட்டின் தேசிய பேரிடர் மையம் ஐ.நா.விடம் தெரிவித்துள்ளது அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. பப்புவா நியூ கினியா நாட்டிற்கு உதவ தயாராக இருப்பதாக ஆஸ்திரேலியா, பிரான்ஸ் ஆகிய நாடுகள் அறிவித்துள்ளன.

## எவரெஸ்ட் சிகரத்தில் மலையேற அலைமோதும் கூட்டம்

நேபாளம், மே. 29

உலகின் மிக உயரமான மலைச்சிகரம் எவரெஸ்ட். 8 ஆயிரத்து 849 மீட்டர் உயரம் கொண்ட இந்த சிகரத்தில் ஏற, சிறந்த உடல்தகுதியும், தன்னம்பிக்கையும் வேண்டும். ஆனால் தற்போது எவரெஸ்ட் மலைச்சிகரத்தில் பலரும் ஏறி சாதனை படைத்தது வருகின்றனர். சில நாட்களுக்கு முன்பு காம்யா கார்த்திகேயன் என்ற 16 வயது சிறுமி எவரெஸ்ட் சிகரத்தில் ஏறிய இளம்வயது இந்திய பெண் என்ற சாதனை படைத்தார். இதே போல் சில நாட்களுக்கு முன்பு எவரெஸ்ட் சிகரத்தை இரண்டே வாரத்தில் மூன்று முறை ஏறிய நபர் என்ற சாதனையை நேபாளத்தை சேர்ந்த பூர்ணிமா ஷ்ரேஸ்தா படைத்துள்ளார் மலையேறும் புகைப்படப் பத்திரிக்கையாளருமான அவர் மே 12 முதல் 25 வரையிலான காலகட்டத்தில் 3 முறை எவரெஸ்ட் சிகரத்தில் எறியுள்ளார். எவரெஸ்ட் மலைச்சிகரத்தில் ஏறுவது மிகவும் சிரமமானது. சிலரால் மட்டும் தான் இந்த சாதனையை படைக்க முடியும் என்ற நிலை மாறி தற்போது தினமும் இந்த சாதனையை பலர் படைத்தது வருகின்றனர். இதற்கு காரணம் எவரெஸ்ட் சிகரத்தில் ஏறுவதற்கு எண்ணற்றோர் ஆர்வம் காட்டுவதும் தான். இந்நிலையில், எவரெஸ்ட் சிகரத்தில் எண்ணற்றோர் மலை ஏறும் காட்சியை சதீஸ் என்பவர் தனது எக்ஸ் பக்கத்தில் பகிர்ந்துள்ளார். அதில், விரைவில் எவரெஸ்ட் மலைச் சிகரத்தில் ஒரு போக்குவரத்து காவலரை பணி நியமனம் செய்து விடலாம் என்று அவர் கிண்டலடித்துள்ளார்.

# ஜீன் 1ம் தேதி டெல்லி செல்கிறார் முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின்



சென்னை, மே. 29

நாடாளுமன்றத்துக்கு 7 கட்டங்களாக நடந்து வரும் தேர்தல் இறுதி கட்டத்தை நெருங்கி உள்ளது. மொத்தம் உள்ள 543 தொகுதிகளில் 486 தொகுதிகளுக்கு தேர்தல் நடத்தி முடிக்கப்பட்டு விட்டது. வருகிற 1ந் தேதி இறுதியாக 7வது கட்டமாக 57 தொகுதிகளுக்கு தேர்தல் நடத்தப்பட இருக்கிறது.

தொடர்ந்து 4ந் தேதி வாக்குகள் எண்ணப்பட்டு முடிவுகள் அறிவிக்கப்படும். அன்று மதியம் மத்தியில் ஆட்சியை பிடிப்பது யார் என்பது உறுதியாகி விடும். நாடாளுமன்றத்தில் மொத்தம் உள்ள 543 இடங்களில் 272 இடங்களை பெறும் கட்சி ஆட்சி அமைக்கும்.

பிரதமர் மோடி தலைமையிலான பா.ஜனதா கூட்டணி 3வது தடவையாக ஆட்சி அமைக்க தீவிரமாக உள்ளது. ஆனால் 'இந்தியா' கூட்டணி தலைவர்கள் தாங்கள்தான் மத்தியில் ஆட்சியை கைப்பற்றுவோம் என்று கூறி வருகிறார்கள். இதன் காரணமாக மத்தியில் யார் ஆட்சி அமையும் என்பதில் மிகுந்த எதிர்பார்ப்பு ஏற்பட்டுள்ளது.

இந்த நிலையில் வருகிற 1ந் தேதி இந்தியா கூட்டணி கட்சி தலைவர்கள் டெல்லியில் கூடி ஆலோசனை நடத்த முடிவு செய்துள்ளனர். 'இந்தியா' கூட்டணியில் காங்கிரஸ், தி.மு.க., சமாஜ்வாடி, தேசியவாத காங்கிரஸ், திரிணாமுல் காங்கிரஸ், உத்தவ் தாக்கரேயின் சிவசேனா, ராஷ்டிரீய லோக்தளம் உள்பட 28 கட்சிகள் உள்ளன. இந்த 28 கட்சி தலைவர்களுக்கும் கூட்டத்தில் பங்கேற்குமாறு அழைப்பு விடுக்கப்பட்டு உள்ளது.

கூட்டத்தில் 7 கட்ட தேர்தலில் இந்தியா கூட்டணி கட்சிகள் எப்படி செயலாற்றி உள்ளன என்பது பற்றி ஆய்வு செய்ய உள்ளனர். தேர்தல் முடிவுகள் எப்படி அமையும் என்பது பற்றியும் விவாதிக்க இருக்கிறார்கள். தேர்தல் முடிவுகளை பொறுத்து அதன் அடிப்படையில் அடுத்தகட்ட நடவடிக்கை எடுப்பது பற்றியும் கூட்டத்தில் முடிவு செய்ய இருக்கிறார்கள்.

மத்தியில் இந்தியா கூட்டணி ஆட்சி அமைக்கும் வாய்ப்பு கிடைக்கும் பட்சத்தில் எப்படி ஒருங்கிணைந்து செயல்படுவது என்பது பற்றியும் கூட்டத்தில் ஆலோசிக்கப்பட உள்ளது. குறிப்பாக பிரதமர் வேட்பாளர் தேர்வு பற்றியும் கூட்டத்தில் பேசப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இதன் காரணமாக 1ந் தேதி நடைபெற உள்ள இந்தியா கூட்டணியின் ஆலோசனை கூட்டம் முக்கியத்துவம் வாய்ந்ததாக கருதப்படுகிறது.

இந்த நிலையில், டெல்லியில் நடைபெற உள்ள இந்தியா கூட்டணி தலைவர்கள் ஆலோசனை கூட்டத்தில் பங்கேற்பதற்காக முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின் ஜூன் 1ம் தேதி (சனிக்கிழமை) காலை 7மணிக்கு விமானம் மூலம் டெல்லி செல்கிறார். டெல்லி செல்லும் முதல்அமைச்சர் கூட்டத்தில் பங்கேற்றுவிட்டு ஜூன் 2ம் தேதி சென்னை திரும்புகிறார்.

இதற்கிடையில் முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் திமுக நிர்வாகிகளுடன் சென்னை அறிவாலயத்தில் இன்று காலை 11 மணிக்கு ஆலோசனை நடத்த உள்ளார். இதில் இந்தியா கூட்டணி தலைவர்கள் கூட்டத்தில் பேசவேண்டிய முக்கிய விஷயங்கள் குறித்து ஆலோசிக்கிறார்.

## கஸ்பாகாரணை கிராஜுவேட்ஸ் அசோசியேஷன் சார்பாக பொதுத்தேர்வில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பாராட்டு விழா

விழுப்புரம், மே. 29

விழுப்புரம் மாவட்டம் கண்டாச்சிபுரம் வட்டம் கஸ்பாகாரனை கிராஜுவேட்ஸ் அசோசியேஷன் பதிவு எண்: 49/2023 சார்பாக பொதுத்தேர்வில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பாராட்டு விழா நடைபெற்றது.

இந்த நிகழ்ச்சிக்கு துணை செயலாளர் சுரேஷ்குமார் வரவேற்பு உரை ஆற்றினார்.

தலைவர் பஞ்சன் நிகழ்ச்சிக்கு தலைமை தாங்கி மாணவர்களுக்கு பரிசளித்தார்.

செயலாளர் மகாவிஷ்ணு வாழ்த்துரை வழங்கினார் பொருளாளர் ஜோதி முன்னிலை வகித்தனர்.




துணை தலைவர் ஆறுமுகம் சிறப்புரை ஆற்றினார்

A.R.R அரசு மேல்நிலைப்பள்ளியிள் பயின்ற பத்தாம் வகுப்பு பொதுத்தேர்வில் முதல் மூன்று இடங்களை பெற்ற மாணவர்கள் பிரசாந்த், தர்ஷினி, கனிமொழி, பவானி மற்றும் பன்னிரண்டாம் வகுப்பில் முதல் மூன்று இடங்களை பிடித்த சௌமியா, ரம்யா, ராஜலட்சுமி ஆகியோருக்கு பரிசு தொகையும், பதக்கமும் வழங்கப்பட்டது.

தூய்மை பணியாளர்களை கௌரவித்து நிதி உதவி வழங்கப்பட்டது.

இந்த பாராட்டு விழாவிற்கு ஏராளமான பொதுமக்கள் நன்கொடை வழங்கி கலந்து கொண்டனர்.

விழாவின் நிறைவில் ஒருங்கிணைப்பாளர்அ.பிரபு நன்றி உரையாற்றினார்.

## முல்லைப் பெரியாறு புதிய அணை குறித்து விவாதிக்கவிருந்த கூட்டம் ரத்து செய்யப்பட்டது வரவேற்கத்தக்கது: அன்புமணி



சென்னை, மே. 29

முல்லைப் பெரியாறு புதிய அணை குறித்து விவாதிக்கவிருந்த கூட்டம் ரத்து செய்யப்பட்டது வரவேற்கத்தக்கது என அன்புமணி ராமதாஸ் கூறியுள்ளார்.

பா.ம.க. தலைவர் அன்புமணி ராமதாஸ் தனது எக்ஸ் வலைத்தளப் பக்கத்தில் வெளியிட்ட பதிவில் தெரிவித்திருப்பதாவது,

முல்லைப்பெரியாற்றின்குறுக்கே புதிய அணையை கட்டுவதாலும், புதிய அணை கட்டப்பட்ட பிறகு இப்போதுள்ள பழைய அணையை இடிப்பதாலும் சுற்றுச்சூழலுக்கு ஏற்படும் பாதிப்புகள் குறித்து ஆய்வு செய்வதற்கான வரம்புகளை நிர்ணயிக்க வேண்டும் என்ற கேரள அரசின் விண்ணப்பம் குறித்து ஆய்வுசெய்து முடிவெடுப்பதற்காக தில்லியில் இன்று நடைபெறவிருந்த மத்திய சுற்றுச்சூழல் அமைச்சகத்தின் வல்லுனர் குழு கூட்டம் ரத்து செய்யப்பட்டிருக்கிறது. மத்திய அரசின் இந்த நடவடிக்கை வரவேற்கத்தக்கது.

முல்லைப் பெரியாறு அணை மிகவும் வலிமையாக உள்ளது. அங்கு புதிய அணை கட்டினால் எவ்வளவு வலிமையாக இருக்குமோ, அதை விடக் கூடுதல் வலிமையுடன் இப்போதைய அணை உள்ளது. எனவே, புதிய அணை தேவையில்லை. மாறாக அணையின் நீர்மட்டத்தை 152 அடியாக உயர்த்துவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று உச்சநீதிமன்றம் தீர்ப்பளித்துள்ள நிலையில் புதிய அணை கட்ட வேண்டும் என்று கேரள அரசு கூறுவது தவறு.

அதை வலியுறுத்தி கேரள அரசு சார்பில் தாக்கல் செய்யப்பட்ட விண்ணப்பத்தை வல்லுனர் குழுவின் ஆய்வுக்கு மத்திய சுற்றுச்சூழல் அமைச்சகம் அனுப்பியது அதை விட தவறு ஆகும். வல்லுனர் குழு கூட்டம் ரத்து செய்யப்பட்டிருப்பதன் மூலம் அந்தத் தவறு சரி செய்யப்பட்டிருக்கிறது.

மத்திய சுற்றுச்சூழல் அமைச்சகத்தின் வல்லுனர் குழு கூட்டம் மீண்டும் நடைபெற்றாலும் கூட, அதில் முல்லைப் பெரியாறு அணை குறித்து எந்த விவாதமும் நடைபெறக் கூடாது. இன்று நடைபெறவிருந்தவல்லுனர்குழுகூட்டத்திற்கான நிகழ்ச்சி நிரலில் சேர்க்கப்பட்டிருந்த முல்லைப்பெரியாறு புதிய அணைக்கான சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு குறித்து ஆய்வு செய்வதற்கான வரம்புகளை நிர்ணயிக்க வேண்டும் என்ற கேரள அரசின் கோரிக்கை நீக்கப்பட வேண்டும். அதை உறுதி செய்ய வேண்டிய கடமையும், பொறுப்பும் தமிழக அரசுக்கு தான் உண்டு.

முல்லைப் பெரியாறு புதிய அணை சிக்கல் குறித்து மத்திய சுற்றுச்சூழல் அமைச்சருக்கு தமிழக முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் கடிதம் எழுதியுள்ளார். அது போதுமானதல்ல. ஒவ்வொரு முறை வல்லுனர் குழு கூட்டம் நடைபெறும் போது அதில் முல்லைப் பெரியாறு அணைகுறித்து விவாதிகப்படாமல் தடுப்பது பெரும் போராட்டமாக இருக்கும்.

உச்சநீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்து வல்லுனர் குழு கூட்டத்தில் முல்லைப் பெரியாறு புதிய அணை குறித்து விவாதிக்க தடை பெறுவது தான் முழுமையானத் தீர்வாக இருக்கும். எனவே, அதற்கான நடவடிக்கைகளை தமிழக அரசு மேற்கொள்ள வேண்டும். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஆத்தூர் சித்தையன் கோட்டையில் அகில இந்திய ராஜகுலத்தோர் பேரவையின் தலைவரும் தேசிய சமூக நீதிக் கட்சியின் தேசிய தலைவர் தலைமையில் புதிய நிர்வாகிகள் தேர்வு

ஆத்தூர் சித்தையன் கோட்டையில் அகில இந்திய ராஜகுலத்தோர் பேரவையின் தலைவரும் தேசிய சமூக நீதிக் கட்சியின் தேசிய தலைவருமான M.K. வெங்கடேஷ் குமார் அவர்கள் தலைமையில் புதிய நிர்வாகிகள் தேர்வு செய்யப்பட்டும் பேருரை நிகழ்வும் நடைபெற்றது

திண்டுக்கல் மாவட்டம் ஆத்தூர் வட்டம் சித்தையன் கோட்டை பேரூராட்சிக்கு உட்பட்ட செங்காட்டு காலனியில் தேசிய சமூக நீதி கட்சி அகில இந்திய ராஜகுலத்தோர் பேரவை கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்திற்கு தேசியத் தலைவர் M.K.வெங்கடேஷ் குமார் அவர்கள் தலைமை வகித்து புதிய பொறுப்பாளர்களை நியமனம் செய்தார் . முன்னதாக அவர் பொதுமக்களிடம் இட ஒதுக்கீடு உள்ளாட்சி தேர்தலில் பங்கேற்பது குறித்து விளக்கம்அளித்து கூறியதாவது

என் அன்பிற்கினிய உடன் பிறந்த சகோதர சகோதரிகளே, இளைஞர்களே, என்னை வழிநடத்தும் பெரியோர்களே சான்றோர்களே உங்கள் அனைவருக்கும் இத்தருணத்தில் எனது அன்பினை உறுத்தாக்குகிறேன்.நாம் அனைவரும் மிகப்பெரிய சபதம் ஏற்போம் அதில் பெண்கள் பாதுகாப்பு மற்றும் கல்வி, வேலை வாய்ப்பு, என்பது உங்கள் நினைவில் இருக்கும் அது மட்டுமல்ல கட்சியின் கட்டமைப்பு , கட்சியின் கொள்கை வெளிபடுத்துதல், உள்ளாட்சி தேர்தலில் பங்களிப்பு மற்றும் உறுப்பினர் சேர்க்கை என நம் கடமைகள் நீண்டுக்கொண்டே இருக்கிறது. எனவே நமது பணி வேகம் எடுக்கவேண்டும் தினம் ஒரு தகவல்கள் உங்களிடம் இந்த இளைஞரணி மாநில தளத்தில் பதிவிட வேண்டும் மட்டுமின்றி உங்களுக்கான மண்டல குழுவில் (வாட்சப்) இளைஞரணி தம்பிகளை தங்களுக்கு ஒதுக்கப்பட்ட மாவட்டங்களில் உள்ளவர்களை உங்களது தளத்திலும் மற்ற மாவட்டங்களில் உங்களுக்கு தெரிந்தவர்கள் இருந்தால் அவர்கள் எந்த மாவட்டத்தை சார்ந்தவர்கள் என்று அறிந்து அவர்களை அந்த மாவட்ட பொறுப்பாளர்களை அணுகி அவர்கள் மூலமாக அந்த மண்டல குழுவில் சேர்த்து விடவேண்டும் மேலும் சேர்க்கும் தம்பிகளுக்கு நமது கட்சி கொள்கை, கோட்பாடு,நமது லட்சியம் நமது போராட்டம், பங்களிப்பு போன்ற எல்லாவற்றையும் தெளிவாக எடுத்துக்கூறி ராணுவத்தில் இருக்கும் சிப்பாய்களாக,

போராளிகளாக உருவாக்கி அவர்களை இந்த தளத்தில் சேர்த்துவிடுமாறு கேட்டுக்கொள்கிறேன்.இதுவே நமது முதல் பணி தங்களுக்கான ஒதுக்கப்பட்ட மண்டல குழுவை இதுவரையாரும் பார்க்கவில்லை என்று நினைக்கிறேன். எனவே அந்த குழுவில் நீங்கள் இன்றையில் இருந்து பராமரிப்பு (அட்மின்) செய்யும்படி கேட்டுக்கொள்கிறேன். மேலும் மாவட்டங்களில் இளைஞரணி பொறுப்பாளர்களை கட்சிக்கு தேர்வு செய்து தலைமை மூலமாக பதவி பெற்றுக்கொடுத்து மாவட்டங்களில் இளைஞர் ராணுவ பட்டாளத்தை கட்டமைத்து. நமது கொடி அனைத்து மாவட்டங்களில் பட்டொளி வீசி பறக்கவிட வேண்டும் நம் சமுதாயத்தாலும்,நம் கட்சியாலும் அனைத்து மக்களும் சமூக நீதியோடு வாழவேண்டும் என உரிமையோடு உங்களிடத்தில் எடுத்துரைக்கிறேன். எந்த நேரத்திலும் தாயார்நிலையில் இருக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன் எனக்கூறினார்...

மேலும் இக்கூட்டத்திற்கு ஒன்றிய செயலாளர் மதுரை வீரன் தலைமை வகித்தார். உடன் மாநில ஒருங்கிணைப்பாளர் வெள்ளைச்சாமி, மாநில இணைசெய்தி தொடர்பாளர் அழகர்சாமி, மற்றும் ஒன்றிய நிர்வாகிகள், புதிதாக இணைந்த மாவட்ட ,ஒன்றிய நிர்வாகிகள் பொதுமக்கள் என பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

# 'இந்தியா' கூட்டணி ஆட்சி அமைக்கப் போவது உறுதி செல்வப்பெருந்தகை



சென்னை, மே. 29

தமிழக காங்கிரஸ் தலைவர் செல்வப்பெருந்தகை வெளியிட்டுள்ள அறிக்கையில்,

மக்களவை தேர்தல் பரப்புரையின் தொடக்கத்திலேயே காங்கிரஸ் கட்சியின் தேர்தல் அறிக்கையில் கூறாததையெல்லாம் திரித்துக் கூறி, முஸ்லிம் லீக்கின் தேர்தல் அறிக்கையை போல இருப்பதாக கூறி பிரதமர் மோடி பேசி வந்தார். ஆனால், முதல்கட்ட தேர்தலில்தமிழகத்தில் தொடங்கிய மோடி எதிர்ப்பு அலை 6 கட்டங்களாக இந்தியாவின் மற்ற பகுதிகளிலும் எதிரொலிக்க தொடங்கியதால் தேர்தல் கள நிலவரத்தை உளவுத்துறை மூலம் அறிந்த பிரதமர் மோடியின் பேச்சில் பதற்றமும், அச்சமும் தொடர்ந்து வெளிப்பட ஆரம்பித்தன. ஆனால், 10 ஆண்டுகால பா.ஜ.க. ஆட்சியில் கொடுத்த வாக்குறுதிகள் எதையும் நிறைவேற்றாத காரணத்தால் விலைவாசி உயர்வு, வேலையில்லா திண்டாட்டம், தவறான ஜி.எஸ்.டி. அமலாக்கம், விவசாயிகளின் விளைப் பொருட்களுக்கு நியாய விலை மறுப்பு, மாநில உரிமைகள் பறிப்பு என மக்கள் விரோத ஆட்சி நடத்தியதால் மக்களிடையே பா.ஜ.க. ஆட்சிக்கு எதிராக அலை வீசிக் கொண்டிருக்கிறது. இந்த அலையினால் மோடி ஆட்சி வருகிற தேர்தலில் தூக்கி எறியப்படுவது உறுதியாகி இருக்கிறது.மக்களிடையே நிலவிய மத நல்லிணக்கத்தை கடந்த 10 ஆண்டுகளாகசீர்குலைத்து வெறுப்பு அரசியலை வளர்த்து அதன்மூலம் பகைமையை உருவாக்கி தேர்தலில் வெற்றி பெற்றது 2019 தேர்தலோடு முடிந்து போன கதையாகும்.

அந்த தேர்தலில் மக்களை மதரீதியாக ஏமாற்றியதைப் போல 2024 இல் ஏமாற்ற முடியாது. மக்கள் விழித்துக் கொண்டு விட்டார்கள். மக்களின் வாழ்வாதாரத்தை சீர்குலைத்த பிரதமர் மோடியின் ஆட்சியை அகற்றி பாடம் புகட்டுவதில் உறுதியாக இருக்கிறார்கள். இந்தியா கூட்டணி ஜூன் 4 ஆம் தேதிக்கு பிறகு ஆட்சி அமைக்கப் போவது உறுதி. இதை மோடி உட்பட எந்த சக்தியாலும் தடுக்க முடியாது. இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# மோட்டார் சைக்கிளில் செல்ல ஆசை: தோழியின் திருமணத்துக்கு சென்ற காதல் ஜோடி அடுத்து நடந்த கொடூரம்

மதுரை, மே. 29

மதுரை மாவட்டம் ஆண்டார்கொட்டாரம், பிள்ளையேந்தல் பகுதியை சேர்ந்தவர் போஸ். இவருடைய மகன் முத்துக்குமார் (வயது 29). இவரும், சென்னை மாதவரம் பகுதியை சேர்ந்த பவித்ரா (24) என்பவரும் காதலித்து வந்தனர்.

இவர்களின் திருமணத்திற்கு இரு வீட்டாரும் சம்மதம் அளித்திருந்ததாக கூறப்படுகிறது. பவித்ராவின் தோழி திருமணம் சிவகங்கையில் நடந்தது. இதில் கலந்து கொள்வதற்காக சென்னையில் இருந்து பவித்ரா மதுரை வந்திருந்தார். பின்னர் அவர் தன்னுடைய காதலரான முத்துக்குமா ருடன் மோட்டார்சைக்கிளில் செல்ல ஆசைப்பட்டார்.

அதன்படி, அவர்கள் இருவரும் மதுரையில் இருந்து சிவகங்கைக்கு மோட்டார்சைக்கிளில் சென்று, அங்கு நடந்த தோழியின் திருமண விழாவில் கலந்து கொண்டனர்.

திருமணத்தை முடித்துவிட்டு இரவு அங்கிருந்து மதுரைக்கு புறப்பட்டனர். இரவு 9.30 மணியளவில் சிவகங்கைமதுரை சாலையில் உறங்கான் பட்டியில் வந்தபோது அவ்வழியாக சென்ற அடையாளம் தெரியாத வாகனம் அவர்கள் வந்த மோட்டார்சைக்கிள் மீது மோதி விட்டு நிற்காமல் சென்றது.

இந்த விபத்தில் கீழே விழுந்த அவர்கள் இருவருக்கும் தலையில் பலத்த காயம் ஏற்பட்டது. இதில் சம்பவ இடத்திலேயே பவித்ரா பரிதாபமாக இறந்தார். அக்கம்பக்கத்தினர் ஓடிவந்து, உயிருக்கு போராடிக் கொண்டிருந்த முத்துக்குமாரை மீட்டு, மதுரை அரசு ஆஸ்பத்திரிக்கு ஆம்புலன்ஸ் மூலம் அனுப்பி வைத்தனர். அங்கு பரிசோதித்த டாக்டர்கள் வரும் வழியில் முத்துக்குமாரும் இறந்து விட்டதாக தெரிவித்தனர்.

இந்தவிபத்து தொடர்பாக கருப்பாயூரணி போலீசார் வழக்குப்பதிவு செய்து விபத்தை ஏற்படுத்திய வாகனத்தையும், அதன் டிரைவரையும் பிடிக்க தீவிர நடவடிக்கை எடுத்து வருகிறார்கள்.

# கன்னியாகுமரி வரும் பிரதமர் மோடி; விவேகானந்தர் பாறையில் இரவு பகலாக தியானம்



சென்னை, மே. 29

நாடு முழுவதும் மொத்தமுள்ள 543 நாடாளுமன்ற தொகுதிகளுக்கு 7 கட்டங்களாக தேர்தல் நடைபெற்று வருகிறது. 6 கட்ட தேர்தல் ஏற்கனவே நிறைவடைந்த நிலையில் 57 தொகுதிகளுக்கு இறுதி கட்ட தேர்தல் வரும் 1ம் தேதி நடைபெற உள்ளது. தேர்தலில் பதிவாகும் வாக்குகள் 4ம் தேதி எண்ணப்பட்டு முடிவுகள் அன்றே அறிவிக்கப்பட உள்ளது.

இந்நிலையில், 3 நாட்கள் பயணமாக பிரதமர் மோடி 30ம் தேதி கன்னியாகுமரி வர உள்ளார். இறுதிகட்ட தேர்தல் பிரசாரம் 30ம் தேதி நிறைவடைய உள்ள நிலையில் அன்று மாலை பிரதமர் மோடி கன்னியாகுமரி வர உள்ளார். 30ம் தேதி மாலை விவேகானந்தர் பாறைக்கு செல்லும் பிரதமர் மோடி அங்குள்ள மண்டபத்தில் தியானம் செய்ய உள்ளார்.

அவர் இரவு பகலாக தியானம் செய்ய உள்ளார். 30ம் தேதி மாலை தியானத்தை தொடங்கும் பிரதமர் மோடி ஜூன் 1ம் தேதி மாலை நிறைவு செய்கிறார்.

3 நாட்கள் அவர் விவேகானந்தர் பாறையில் தியானம் செய்ய உள்ளார். பிரதமர் மோடி கன்னியாகுமரி வர உள்ள நிலையில் விவேகானந்தர் பாறை மற்றும்

அதனை சுற்றியுள்ள பகுதியில் போலீசார் தீவிர பாதுகாப்பு பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

# முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் ஆட்சியில் கிராமப்புறங்களில் சிறப்பான முன்னேற்றம் தமிழக அரசு

சென்னை,மே.29

தமிழக அரசு வெளியிட்டு உள்ள செய்திக்குறிப்பில் கூறி இருப்பதாவது,

முதல்அமைச்சர் மு.க. ஸ்டாலின் கிராமங்களின் வளர்ச்சிக்காக சிறப்பான பல திட்டங்களை அறிமுகப்படுத்தி செயல்படுத்தி வருகிறார்.கிராம ஊராட்சிகளில் போதுமான தகவல் தொழில்நுட்பக் கட்டுமானத்தை உறுதி செய்திடும் விதமாக 12,525 கிராம ஊராட்சிகளிலும் கணினிகள் பிரிண்டர்கள் மற்றும் தடையில்லா மின்கலன்கள் சாதனம் பயன்பாட்டில் கொண்டு வரப்பட்டுள்ளது.சொத்து வரி, குடிநீர் கட்டணம், தொழில் வரி, திட்ட அனுமதி, மனைப்பிரிவு அனுமதி மற்றும் கட்டிட அனுமதி போன்ற மக்கள் நலன் சார்ந்த அரசு சேவைகளை இணையதளம் வாயிலாக எளிதில் பெற உதவும் வகையில் ஊராட்சிகளில் மின் ஆளுமைக்கான இணையதளம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

கிராம ஊராட்சிகளுக்கு நிர்வாக அனுமதி அளிக்கும் நிதிவரம்பு ரூ.2 லட்சம் ரூ.5 லட்சமாகவும், வட்டார ஊராட்சிகளுக்கு ரூ.10 லட்சம் ரூ.25 லட்சமாகவும் மாவட்ட ஊராட்சிகளுக்கு ரூ20 லட்சம் ரூ.50 லட்சமாக உயர்த்தப்பட்டுள்ளது.மீண்டும் உத்தமர் காந்தி விருது, மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம், ஊரகச் சாலைகள் மேம்பாட்டுத் திட்டம், சாதிவேறுபாடுகளை நீக்க கிராமப்புறங்களிலும் எரிவாயு தகன மேடை திட்டம், ஊரக வீடு வழங்கும் திட்டங்கள், பெரியார் நினைவு சமத்துவபுரம், நமக்கு நாமே திட்டம், சட்ட மன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம், பாராளுமன்ற உறுப்பினர் உள்ளூர் பகுதி மேம்பாட்டுத் திட்டம், தூய்மை பாரத இயக்கம் (ஊரகம்), நம்ம ஊரு சூப்பரு பிரசாரம், ஜல் ஜீவன் திட்டம் உள்ளிட்ட பல்வேறு திட்டங்கள் நல்ல முன்னேற்றம் ஏற்பட்டு உள்ளது.2021ம் ஆண்டு மே 7ந்தேதி முதல் 2024ம் ஆண்டு பிப்ரவரி 13ந்தேதி வரை சுழல்நிதி ரூ.629.55 கோடி, சமுதாய முதலீட்டு நிதி ரூ.629.55 கோடி நலிவு நிலை குறைப்புநிதி ரூ.14.59 கோடி சுய உதவிக் குழுக்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

2,56,508 மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு வங்கிகள் மூலம் கடனாக ரூ.71,960.43 கோடி வழங்கப்பட்டுள்ளது . கடந்த ஒரு ஆண்டில் 6,800 மாற்றுத் திறனாளி குழுக்களுக்குத் தொழில் துவங்கிடும் நோக்கில் சமுதாய முதலீட்டு நிதியில் இருந்து 40.80 கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளது.

45,150 நகர்ப்புற ஏழை இளைஞர்களுக்குவேலை வாய்ப்புடன் கூடிய திறன் வளர்ப்பு பயிற்சி அளிக்கப்பட்டு, ரூபாய்89.30கோடி நிதி விடுவிக்கப்பட்டுள்ளது.511 வேலைவாய்ப்பு முகாம்கள் இளைஞர் திறன் விழாக்கள் ரூ.4.01 கோடி செலவில் மாவட்ட அளவில் நடத்தப்பட்டு 92,003 இளைஞர்கள் பல்வேறு நிறுவனங்களில் பணியமர்த்தப்பட்டுள்ளனர்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# மே மாதத்துக்கான பாமாயில், பருப்பை ஜூன் முதல் வாரத்தில் பெற்றுக்கொள்ளலாம் தமிழக அரசு அறிவிப்பு




சென்னை, மே. 26

உணவுப்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:

தமிழ்நாடு அரசு, சிறப்புப் பொது விநியோகத் திட்டத்தின் வாயிலாக 2.23 கோடி குடும்ப அட்டைதாரர்களுக்கு மாதம் தோறும் தலா ஒரு கிலோ துவரம்பருப்புரூ.30க்கும், ஒரு லிட்டர் பாமாயில் ரூ.25க்கும் மானிய விலையில் வழங்கி வருகிறது.

நாடாளுமன்ற தேர்தல் நடத்தை விதிகள் காரணமாக பாமாயில் மற்றும் துவரம் பருப்புக்கான ஒப்பந்தப்புள்ளிகள் மீதான முடிவுகள் மேற்கொண்டு அப்பண்டங்களைக் கொள்முதல் செய்வதில் காலதாமதம் நேரிட்டது. இருப்பினும் அரசின் தொடர்ந்த சீரிய முயற்சிகள் காரணமாக நகர்வுப் பணிகள் விரைவாக மேற்கொள்ளப்பட்டு நேற்றுவரை82.82.702குடும்ப அட்டைதாரர்களுக்குதலா ஒருகிலோதுவரம்பருப்பினையும் 75.87,865 குடும்ப அட்டைதாரர்களுக்கு தலா ஒரு லிட்டர் பாமாயில் பாக்கெட்டினையும் நியாயவிலை கடைகளிலிருந்து வழங்கப்பட்டுள்ளது.

குடும்ப அட்டைதாரர்களுக்கு மே மாத ஒதுக்கீட்டினை இம்மாத இறுதிக்குள் வழங்கிட அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இருப்பினும் மே மாதத்தில் பருப்பு மற்றும் பாமாயில் பெற முடியாதவர்கள் வசதிக்காக ஜூன் முதல் வாரம் வரை நியாயவிலைக்கடைகளில் துவரம் பருப்பு மற்றும் பாமாயில் பெற்றுக் கொள்ள தேவையான அனைத்து ஏற்பாடுகளும் மேற்கொளும்படி மாவட்ட வழங்கல் அலுவலர்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளார்கள்.

குடும்ப அட்டைதாரர்களின் நன்மையினைக் கருத்தில் கொண்டு மே மாதத்தில்துவரம்பருப்புமற்றும் பாமாயில் பாக்கெட் பெற இயலாத அட்டைதாரர்கள் அவர்களுக்கான துவரம் பருப்பு மற்றும் பாமாயில் பாக்கெட்டினை ஜூன் மாத முதல் வாரத்தில் பெற்றுக் கொள்ளலாம் என அறிவிக்கப்படுகிறது.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# ஜூன் 1ம் தேதி திமுக மாவட்டச் செயலாளர்கள், வாக்கு எண்ணிக்கை முகவர்கள் ஆலோசனை கூட்டம்

சென்னை, மே. 29

திமுக பொதுச்செயலாளர் துரைமுருகன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

திமுக தலைவரும், முதல்அமைச்சருமான மு.க.ஸ்டாலினின் அறிவுரையின்படி,ஜூன்4அன்று நடைபெற உள்ள வாக்கு எண்ணிக்கை குறித்து கலந்து ஆலோசித்திட, கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி தலைமையில் "மாவட்டக் கழகச் செயலாளர்கள், கழக வேட்பாளர்கள்,தலைமை முகவர்கள் மற்றும் வாக்கு எண்ணிக்கை முகவர்கள் கலந்தாலோசனைக் கூட்டம்" வருகிற 01062024 (சனிக்கிழமை) காலை 11.00 மணி அளவில், காணொலி காட்சி வாயிலாக நடைபெறும்.

இக்கூட்டத்தில் தி.மு.க. சட்டத்துறைச் செயலாளர் என்.ஆர். இளங்கோ, எம்.பி., வாக்கு எண்ணிக்கையின்போது தலைமை முகவர் மற்றும் வாக்கு எண்ணிக்கை முகவர்கள் கடைபிடிக்க வேண்டிய வழி முறைகள் குறித்து ஆலோசனை வழங்குவார். கூட்டத்தில் மாவட்டக்கழகச் செயலாளர்கள், கழக வேட்பாளர்கள் தலைமை முகவர்கள் மற்றும் வாக்கு எண்ணிக்கை முகவர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளும்படி கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# 8ம் வகுப்பு மாணவன் வெட்டிக்கொலை செய்யப்பட்ட வழக்கில் வாலிபர் கைது

காரைக்கால், மே. 29

காரைக்காலை அடுத்த நிரவி பகுதி திருமலைராஜன் ஆற்றுப் பாலம் அருகே உள்ளது ஒயிட் ஹவுஸ் காலனி. இப்பகுதியை சேர்ந்த தச்சு தொழிலாளிசிங்காரவேலு என்பவரின் மகன் சந்தோஷ் (வயது 13). 8ம் வகுப்பு படித்து விட்டு விடுமுறையில் இருந்து வந்தான்.

இந்தநிலையில் இவன் தனது நண்பர்களுடன் வீட்டின் அருகே நேற்று மதியம் விளையாடிக் கொண்டிருந்தான். மாலையில் திடீரென மாணவனை காணவில்லை. இதனால் சந்தோசை அவனது பெற்றோர்கள் தேடிப் பார்த்தனர். அப்போது இரவு 7 மணி அளவில் வீட்டின் அருகே சந்தோஷ் கழுத்து உள்பட உடலில் பல இடங்களில் வெட்டப்பட்டு கொலை செய்யப்பட்டிருப்பது தெரியவந்தது. அவனது உடலைப்பார்த்து பெற்றோர்கள் அதிர்ச்சி அடைந்துகதறிதுடித்தனர்.

இதுபற்றி தகவலறிந்து நிரவி போலீசார் சம்பவ இடத்துக்கு விரைந்து வந்துசந்தோஷின்உடலை கைப்பற்றி பிரேதபரிசோதனைக்காக அரசு ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைத்தனர். தொடர்ந்து சந்தோஷின் பெற்றோர் புகார் தெரிவித்ததன் பேரில் போலீசார் வழக்குப்பதிவு செய்து கொலை செய்த மர்ம நபர் குறித்து விசாரணை நடத்தினர்.

விசாரணையில் அதே பகுதியை சேர்ந்த 19 வயது வாலிபரும், சந்தோஷும் அந்த பகுதியில் விளையாடியது தெரியவந்தது. இதனையடுத்து விசாரிப்பதற்காக அந்த வாலிபரை போலீசார் தேடிய போது அவர் தலைமறைவானது தெரியவந்தது. இதையடுத்து அந்த வாலிபரை போலீசார் வலைவீசி தேடி வந்தனர்.

இந்த நிலையில், சிறுவன் கொல்லப்பட்ட வழக்கில் தலைமறைவாக இருந்த வாலிபரை புதுச்சேரி போலீசார் தற்போது கைது செய்துள்ளனர். மயிலாடுதுறையில் சுற்றி திரிந்தபோது சுற்றிவளைத்து போலீசார் கைது செய்தனர். கைதான வாலிபரை காரைக்காலுக்குஅழைத்து சென்று ரகசிய இடத்தில் வைத்து போலீசார் விசாரித்து வருகின்றனர்.

# தொடர்ந்து 2வது நாளாக உயர்ந்த தங்கம் விலை...இன்றைய நிலவரம் என்ன?



சென்னை, மே. 29


தங்கம் விலை கடந்த மாதத்தில் கிடுகிடுவென அதிகரித்து ஒரு சவரன் ரூ.55 ஆயிரத்தை கடந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

தங்கம் விலை கடந்த மாதத்தில் கிடுகிடுவென அதிகரித்து ஒரு சவரன் ரூ.55 ஆயிரத்தை கடந்தது. நடுத்தர மற்றும் ஏழை, எளிய மக்களுக்கு எட்டாக் கனியாகிவிடும் என்று நினைக்கத் தோன்றும் அளவுக்கு தங்கம் விலை தொடர்ந்து அதிகரித்தது. இந்த நிலையில் அட்சய திருதியை முன்னிட்டு தங்கம் விலை ஒரே நாளில் மூன்று முறை அதிகரித்து அதிர்ச்சியளித்தது. நேற்று தங்கம் விலை சவரனுக்கு ரூ.520 உயர்ந்த நிலையில், இன்று மேலும் உயர்ந்துள்ளது.

அதன்படி, சென்னையில் 22 கேரட் ஆபரணத் தங்கத்தின் விலை இன்று சவரனுக்கு ரூ.160 உயர்ந்து ரூ.53,920க்கு விற்பனை செய்யப்படுகிறது.

ஆபரணத் தங்கம் கிராமுக்கு ரூ.20 உயர்ந்து ரூ.6,740க்கு விற்பனை செய்யப்படுகிறது . வெள்ளி விலை கிராமுக்கு 3 ரூபாய் 50 காசுகள் உயர்ந்து ரூ.101க்கு விற்பனை செய்யப்படுகிறது.

# மனைவி குடும்பம் நடத்த வர மறுப்பு மாமனாரை அடித்துக்கொன்ற மருமகன்



தூத்துக்குடி, மே. 29

தூத்துக்குடி அருகே திரவியபுரம் கிழக்கு தெருவைச் சேர்ந்தவர் இருதயமணி(வயது55),விவசாயி. இவருடைய மகள் மரிய விண்ணரசி. இவருக்கும், தூத்துக்குடி சின்னகண்ணுபுரத்தைச் சேர்ந்த சண்முகவேல் மகன் ஆனந்த் (26) என்பவருக்கும் கடந்த 4 ஆண்டுகளுக்கு முன்பு திருமணம் நடந்தது.

ஆனந்த், தனியார் நிறுவனத்தில் கூலி தொழிலாளியாக வேலை செய்து வந்தார். இவர்களுக்கு ஒரு பெண் குழந்தை உள்ளது. ஆனந்த் அடிக்கடி மது குடித்து விட்டு சரிவர வேலைக்கு செல்லாமல் இருந்து வந்ததாக கூறப்படுகிறது. இதனை மரிய விண்ணரசி கண்டித்தார். இதனால் அவர்களுக்கு இடையே அடிக்கடி தகராறு ஏற்பட்டது.

கடந்த ஓராண்டுக்கு முன்பு மரிய விண்ணரசி கணவரிடம் கோபித்து கொண்டு திரவியபுரத்தில் உள்ள பெற்றோரின் வீட்டுக்கு குழந்தையுடன் சென்று விட்டார். பின்னர் ஆனந்த் அடிக்கடி மாமனாரின் வீட்டுக்கு சென்று மனைவியை குடும்பம் நடத்த வருமாறு அழைத்து வந்தார். ஆனாலும் கணவருடன் செல்ல மரிய விண்ணரசி மறுத்து விட்டார்.

மாமனாரின் வீட்டுக்கு சென்ற ஆனந்த், மனைவியை குடும்பம் நடத்த அனுப்பி வைக்குமாறு கூறி தகராறு செய்தார். ஆனால் மாமனாரின் குடும்பத்தினர் மறுத்து விட்டனர். இதனால் அங்கிருந்து சென்ற ஆனந்த், இரவு 11 மணி அளவில் மீண்டும் மாமனாரின் வீட்டுக்கு சென்றார். அங்கு வீட்டின் அருகே தோட்டத்தில் இருந்த இருதயமணியை சந்தித்து பேசினார். அப்போது அவர்களுக்கு இடையே வாக்குவாதம் ஏற்பட்டது.

இதில் ஆத்திரமடைந்த ஆனந்த், தோட்டத்தில் கிடந்த உருட்டுக்கட்டையை எடுத்து இருதயமணியை சரமாரியாக தாக்கியதாக கூறப்படுகிறது. இதில் பலத்த காயம் அடைந்த இருதயமணி சம்பவ இடத்திலேயே ரத்த வெள்ளத்தில் துடிதுடித்து பரிதாபமாக இறந்தார். பின்னர் ஆனந்த் அங்கிருந்து தப்பி சென்று விட்டார்.

இதுகுறித்து தகவல் அறிந்ததும், புதுக்கோட்டை போலீசார் சம்பவ இடத்துக்கு விரைந்து சென்றனர். இறந்த இருதயமணியின் உடலைக் கைப்பற்றி பிரேத பரிசோதனைக்காக தூத்துக்குடி அரசு ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைத்தனர். மேலும் இதுகுறித்து வழக்குப்பதிவு செய்து, ஆனந்தை கைது செய்தனர். தூத்துக்குடி அருகே மனைவி குடும்பம் நடத்த வர மறுத்ததால் மாமனாரை மருமகன் அடித்துக் கொலை செய்த பயங்கர சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.

# மருத்துவமனையில் ஸ்ட்ரெச்சர் தராமல் அலைக்கழிப்பு.. வயதான தாயை தூக்கி சென்ற மகள் வைரல் வீடியோ



ஈரோடு, மே. 29

ஈரோடு மாவட்டம் பெரியவலசு பகுதியை சேர்ந்த 80 வயது மூதாட்டி சொர்ணா. இவர் சாலையோரம் நடந்து சென்று கொண்டிருந்தபோது எதிர்பாராத விதமாக இருசக்கர வாகனம் மோதியதில் காலில் காயம் ஏற்பட்டது. இதனையடுத்து அவரை மீட்ட அவரது மகள் வளர்மதி, ஆட்டோ மூலம் ஈரோடு அரசு தலைமை மருத்துவமனைக்கு அழைத்து வந்துள்ளார்.

அவர்களைக் கண்ட மருத்துவர்கள் மூதாட்டியை விபத்து மற்றும் அவசர சிகிச்சை பிரிவிற்கு அழைத்து செல்லுமாறு கூறியுள்ளனர். மூதாட்டியை சம்பந்தப்பட்ட பிரிவுக்கு அழைத்து செல்ல ஸ்ட்ரெச்சர் அல்லது சக்கர நாற்காலியை கேட்ட போது, மருத்துவர்களும், மருத்துவமனை ஊழியர்களும் பதில் ஒன்றும் கூறாமல் அலைகழித்ததாக கூறப்படுகிறது.

இதையடுத்து, வலியால் துடித்து கொண்டிருந்த மூதாட்டியை, மகள் வளர்மதி தன்னந்தனியாக விபத்து மற்றும் அவசர சிகிச்சை பிரிவுக்கு தூக்கிச் சென்றார்.

மூதாட்டியை பெண் தூக்கி சென்றதை மருத்துவமனை வளாகத்தில் இருந்த அனைவரும் பார்த்தனர்.

ஆனால் யாரும் அவருக்கு உதவி செய்ய முன்வரவில்லை. இந்த சம்பவம் தொடர்பான வீடியோ சமூக வலைத்தளங்களில் வெளியாகி பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

# தூங்கிக்கொண்டிருந்த காதல் ஜோடியை வெட்டி சாய்த்த கும்பல்: சென்னையில் பரபரப்பு

சென்னை, மே. 29

சென்னை டி.பி.சத்திரம் 27வது குறுக்கு தெருவை சேர்ந்தவர் இஸ்ரவேல் (வயது 20). இவர் சென்னையில் உள்ள கல்லூரி ஒன்றில் 2ம் ஆண்டு பட்டப்படிப்பு படித்ததாக கூறப்படுகிறது. இவர் மீது பல்வேறு அடிதடி வழக்குகள் நிலுவையில் உள்ளது. இவர், ஜாபர்கான் பேட்டை பகுதியை சேர்ந்த பள்ளி மாணவியை காதலித்து வந்ததாக கூறப்படுகிறது.

இவர்கள் 2 பேரும் ஒன்றாக ஜாலியாக சுற்றி வந்தனர். கடந்த சனிக்கிழமை இரவு பெரியமேடு பகுதியில் ஒன்றாக கைகோர்த்தபடி நடந்து வந்தனர். அப்போது அதே பகுதியை சேர்ந்த பிரபல ரவுடி அப்பாஸ் என்பவர் வழிமறித்து தகராறில் ஈடுபட்டுள்ளார்.

இஸ்ரவேலின் காதலியிடம் தவறாக நடக்க முயற்சித்துள்ளார். அதில் மோதல் ஏற்பட்டது. அக்கம், பக்கத்தினர் தடுத்து அவர்களை விலக்கி விட்டுள்ளனர்.

ஆனால் அப்பாஸ் இஸ்ரவேலையும், அவரது காதலியையும் தீர்த்துக்கட்டாமல் விடமாட்டேன் என்று மிரட்டி அனுப்பியதாக தெரிகிறது. இதனால் இஸ்ரவேல் மிகவும் எச்சரிக்கையோடு தனது காதலியோடு டி.பி. சத்திரம் பகுதியில் உள்ள வீட்டின் மொட்டை மாடியில் நேற்று முன்தினம் இரவு படுத்து தூங்கி உள்ளார்.

அவர்களை தீர்த்துக்கட்டும் நோக்கத்தோடு அப்பாஸ் தனது நண்பர்கள் 3 பேருடன் சேர்ந்து கொடூர தாக்குதல் நடத்தியதாக கூறப்படுகிறது. இஸ்ரவேலுக்கும், அவரது காதலிக்கும் அரிவாள் வெட்டு விழுந்தது. இதில் இஸ்ரவேல் பலத்த காயமடைந்தார். அவரது காதலிக்கும் காயம் ஏற்பட்டது. அக்கம், பக்கத்தினர் திரண்டு வந்ததால் அப்பாசும், அவரது நண்பர்களும் தப்பி ஓடிவிட்டனர்.

இஸ்ரவேலும், அவரது காதலியும் கீழ்ப்பாக்கம் அரசு ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வருகின்றனர். இந்த சம்பவம் தொடர்பாக கீழ்ப்பாக்கம் போலீசார் கொலைமுயற்சி வழக்குப்பதிவு செய்து விசாரணை மேற்கொண்டு அப்பாசும், மற்றும் அவரது நண்பர்கள் 3 பேரை கைது செய்தனர். கைது செய்யப்பட்டவர்களிடம் தொடர்ந்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

இந்த சம்பவம் சென்னையில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.

# மெட்ரோ ரெயில் பணி: ஆலந்தூர், பரங்கிமலையில் போக்குவரத்து மாற்றம்

சென்னை, மே. 29

சென்னையை அடுத்த பரங்கிமலை ஆலந்தூர் ரெயில் நிலையங்கள் இடையே மெட்ரோ ரெயில் கட்டுமான பணிகள் நடந்து வருகிறது. இதையொட்டி ஆலந்தூர், பரங்கிமலை பகுதியில் போக்குவரத்து மாற்றம் செய்யப்பட்டு உள்ளது. அதன்படி ஜி.எஸ்.டி சாலையில் இருந்து வரும் வாகனங்கள் வழக்கம் போல ஆலந்தூர் சுரங்க ப் பாதையை நோக்கி இடது புறமாக செல்லலாம். இந்த சாலையில் கனரக வாகனங்கள் மட்டும் செல்ல தடை விதிக்கப்பட்டுள்ளது. ஆலந்தூர் எம்.கே.என். சாலை மற்றும் ரெயில் நிலைய சாலை சந்திப்பில் இருந்து வரும் வாகனங்கள் நேராக பரங்கிமலை அஞ்சல் நிலையம் நோக்கி செல்ல அனுமதி இல்லை. ஆலந்தூர் சுரங்கப்பாதையில் இருந்து வரும் வாகனங்கள் ஜி.எஸ்.டி. சாலையில் செல்வதற்கு வலது புறமாகவோ அல்லது இடது புறமாகவோ செல்லலாம்.

இந்த போக்குவரத்து மாற்றம் காரணமாக நெரிசல் ஏற்படாமல் இருக்க போக்குவரத்து போலீஸ் இன்ஸ்பெக்டர் தினகரன் தலைமையில் போலீசார் மற்றும் மெட்ரோ ரெயில் பணியாளர்கள் அங்கு பணியில் ஈடுபட்டுள்ளனர்.

# திருமணம் செய்வதாக கூறி காதலியுடன் உல்லாசம்: வாலிபர் கைது

சேலம், மே. 29

சேலம் மாவட்டம் ஆத்தூர் அருகே வளையமாதேவி எம்.பி.சி.நகர் பகுதியை சேர்ந்த பச்சமுத்து மகன் பாரத் (வயது 25), இவரும் தலைவாசல் பகுதியை சேர்ந்த 20 வயது பெண்ணும் கடந்த 2 ஆண்டுகளாக காதலித்து வந்துள்ளனர். இருவரும் வெவ்வேறு சமுதாயத்தை சேர்ந்தவர்கள். இதற்கிடையே திருமணம் செய்வதாக கூறி அந்த பெண்ணை பல்வேறு இடங்களுக்கு அழைத்து சென்று உல்லாசமாக இருந்துள்ளார். அதன்பிறகு அந்த பெண் தன்னை திருமணம் செய்து கொள்ளும்படி வலியுறுத்தி உள்ளார். அதற்கு பாரத் மறுப்பு தெரிவித்து வந்துள்ளார். இதனால் மனம் உடைந்த அந்த பெண், ஆத்தூர் அனைத்து மகளிர் போலீசில் புகார் மனு கொடுத்துள்ளார். அதன்பேரில் போலீசார் விசாரணை நடத்தி பாரத் மீது வழக்குப்பதிவு செய்து அவரை கைது செய்தனர்.

# இன்றுடன் நிறைவடையும் கத்திரி வெயில்.. கோடை மழையால் தணிந்த வெப்பம்

சென்னை, மே. 29

அக்னி நட்சத்திரம் என்ற கத்திரி வெயில் கடந்த 4ந் தேதி தொடங்கி இன்று (செவ்வாய்க்கிழமை) நிறைவடைகிறது. பொதுவாக கத்திரி வெயிலின் போது வெப்பம் 100 டிகிரியை தாண்டி பதிவாவது வழக்கம். ஆனால் இந்த ஆண்டு ஏப்ரல் மாதத்தில் இருந்தே பல நகரங்களில் வெப்பம் 100 டிகிரியை தாண்டி வெயில் பதிவானது. சில ஆண்டுகளில் கத்திரி வெயிலே தெரியாத வகையிலும் இருந்துள்ளது. ஆனால் இந்த ஆண்டு கடந்த 4ந் தேதி கத்திரி வெயில் தொடங்கியது முதல் உள்மாவட்டங்கள் மட்டுமல்லாது கடலோர மாவட்டங்களிலும் கடும் வெயில் சுட்டெரித்தது. எனினும், கடந்த 8ந் தேதியில் இருந்து 24ந் தேதி வரை கத்திரி வெயில் காலத்தில் தமிழகத்தில் பல இடங்களில் கோடை மழை பெய்தது. இதனால் வெப்பத்தின் அளவு குறைந்து காணப்பட்டது. கடந்த 4ந் தேதி சென்னை மீனம்பாக்கம், கரூர், வேலூர் உள்பட 15 இடங்கள், கடந்த 7ந் தேதி திருச்சி, மதுரை உள்பட 11 இடங்கள், 8ந் தேதி கரூர், நாமக்கல் உள்பட 9 இடங்களில் வெயில் சதம் அடித்தது. தொடர்ந்து 24ந் தேதி வரை பரவலாக மழை பெய்ததால் வெப்பத்தின் தாக்கம் இல்லாமல் இருந்தது. இதற்கிடையில் கடந்த 22ந் தேதி வங்கக்கடலில் காற்றழுத்த தாழ்வுப்பகுதி உருவானது. இதனால் கத்திரி வெயிலால் ஏற்படும் வெப்பத்தின் தாக்கம் முற்றிலும் இல்லாமல் இருந்தது. இந்தநிலையில் இன்று (செவ்வாய்க்கிழமை) கத்திரி வெயில் நிறைவடைகிறது. இது பொதுமக்களுக்கு ஆறுதல் அளிக்கும் விதமாக உள்ளது. அக்னி நட்சத்திரம் இன்று முடிவடைந்தாலும் மேலும் சில நாட்களுக்கு வெயிலின் தாக்கம் அதிகமாகவே இருக்கும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. இதனாலேயே பள்ளிகள் ஜூன் 6ந் தேதிக்கு திறக்கப்படுகிறது என்று அதிகாரிகள் கூறினர்.

# காதலியுடன் அடிக்கடி தகராறு: வடமாநில வாலிபர் தற்கொலை

ஓசூர், மே. 29

கிருஷ்ணகிரி மாவட்டம் வேப்பனப்பள்ளி அருகே தங்காடிகுப்பம் கிராம பகுதியில் உள்ள தனியார் கோழிப்பண்ணையில் சத்தீஸ்கார் மாநிலத்தைச் சேர்ந்த துளசிராம் பஹாரியா (வயது 21) என்பவர் தொழிலாளியாக வேலை செய்து வந்தார்.

இதற்கிடையே துளசிராம் பஹாரியா பெண் ஒருவரை காதலித்து வந்ததாக கூறப்படுகிறது.

தற்போது சமீபகாலமாக காதலியுடன் அடிக்கடி தகராறு ஏற்பட்டு வந்ததாக தெரிகிறது. இதனால் மனமுடைந்து காணப்பட்ட துளசிராம் பஹாரியா நேற்று மாலை கோழிப்பண்ணை அருகே உள்ள மரத்தில் தூக்குப்போட்டு தற்கொலை செய்து கொண்டார்.

இதுகுறித்து தகவல் அறிந்து சம்பவ இடத்துக்கு சென்ற வேப்பனப்பள்ளி போலீசார் வாலிபரின் உடலை கைப்பற்றி பிரேத பரிசோதனைக்காக கிருஷ்ணகிரி அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.

மேலும் இந்த சம்பவம் குறித்து போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர். வாலிபர் தூக்குப்போட்டு தற்கொலை செய்து கொண்டார்.

# உடல் உறுப்புகள் திருட்டு: கோவை, ராமநாதபுரம் மாவட்டங்களில் கேரள தனிப்படை போலீசார் விசாரணை

கோவை, மே. 29

கேரள மாநிலம் திருச்சூர் மாவட்டம் வலப்பாடு பகுதியை சேர்ந்தவர் சபித் நாசர்(வயது 42). இவர் அதிக பணம் தருவதாக கூறி, பிற மாநிலத்தவர்கள், கூலி தொழிலாளர்களை ஈரானுக்கு அனுப்பி வைத்தார். பின்னர் ஆஸ்பத்திரியில் மருத்துவ பரிசோதனை செய்வதாக கூறி, அங்கு அறுவை சிகிச்சை மூலம் அவர்களது சிறுநீரகங்கள், கல்லீரலை எடுத்து கடத்தி விற்பனை செய்து வந்ததாக புகார் எழுந்தது.

அதன் பேரில் திருச்சூர் போலீசார் வழக்குப்பதிவு செய்து, தலைமறைவான சபித் நாசரை கடந்த 19ந் தேதி கைது செய்தனர்.

அவரிடம் நடத்திய விசாரணையில், எடப்பள்ளி பகுதியை சேர்ந்த சஜித் சாபு (30) என்பவருக்கும் உடல் உறுப்புகள் கடத்தல் சம்பவத்தில் தொடர்பு இருப்பதும், கும்பலின் வரவு, செலவு கணக்குகளை கவனித்து வந்ததும் தெரியவந்தது. தொடர்ந்து அவரை போலீசார் கைது செய்தனர்.

இதையடுத்து சபித் நாசரை ஒரு வாரம் காவலில் எடுத்து விசாரிக்க போலீசாருக்கு அங்கமாலி கோர்ட்டு அனுமதி வழங்கி உத்தரவிட்டது. பின்னர் ரகசிய இடத்தில் வைத்து சபித் நாசரிடம் போலீசார் தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர்.

இந்த சம்பவம் தொடர்பாக எர்ணாகுளம் ஊரக போலீஸ் சூப்பிரண்டு வைபவ் சாக்சனா தலைமையில் 10 போலீசார் அடங்கிய தனிப்படை அமைக்கப்பட்டு உள்ளது. தனிப்படை போலீசார் தமிழ்நாட்டில் கோவை, ராமநாதபுரம் மாவட்டங்களில் விசாரணை நடத்தி வருகின்றனர். உறுப்புகளை கொடுத்தவர்கள் அல்லது இழந்தவர்களின் விவரங்களை சேகரித்து, அவர்களிடம் விசாரணை நடத்தப்பட்டு வருகிறது. இதை தொடர்ந்து பெங்களூரு, ஐதராபாத்தில் விசாரணை நடத்த கேரள போலீசார் திட்டமிட்டு உள்ளனர்.

# தி.மு.க. ஆட்சியில் தொழில் துறையின் வளர்ச்சி சீரழிந்துக் கொண்டிருக்கின்றது: ஓ.பன்னீர்செல்வம்

சென்னை, மே. 29

தமிழக முன்னாள் முதல் அமைச்சர் ஓ.பன்னீர்செல்வம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது,

தொழில்கள் வளர வேண்டும், தொழிலாளர்கள் வாழ வேண்டுமென்ற அடிப்படையில் ஓர் அரசு செயல்படுமேயானால், உற்பத்தி, வேலைவாய்ப்பு மற்றும் அரசாங்கத்திற்கான வருவாய் பெருகி நாட்டின் பொருளாதாரம் வளர்ச்சியடையும். ஆனால், கடந்த மூன்று ஆண்டு கால தி.மு.க. ஆட்சியில் தொழில் துறையின் ஒட்டுமொத்த வளர்ச்சி சீரழிந்துக் கொண்டிருக்கின்றது.

'தொழில் நிறுவனங்களை நலிவிலிருந்து மீட்போம்' என்று வாக்குறுதி அளித்து ஆட்சிக்கு வந்த தி.மு.க., ஆட்சிக்கு வந்த பிறகு தொழில் நிறுவனங்களை நசுக்கும் பணியை செய்து வருகிறது. மின் கட்டண உயர்வு, நிலைக் கட்டண உயர்வு, உச்ச நேர மின் கட்டணம், மேற்கூரை சூரியசக்திக்கான மின் கட்டணம் போன்றவற்றை உயர்த்தி, தொழிலையே மேற்கொள்ள முடியாத அளவுக்கு தொழில் முனைவோரையும், தொழிலாளர்களையும் வஞ்சித்து வருகின்ற அரசாக தி.மு.க. அரசு விளங்கிக் கொண்டிருக்கின்றது.

இந்த நிலையில், எரிகிற நெருப்பில் எண்ணெய் ஊற்றும் விதமாக, வெளிச் சந்தையில் இருந்து மின்சாரம் பெற்றுவரும் தொழில் துறையினருக்கு, ஒரு யூனிட் மின்சாரத்திற்கு 34 காசு மேல்வரி (சர்சார்ஜ்) விதிக்க நடவடிக்கை எடுத்துள்ளதாக பத்திரிகைகளில் செய்தி வந்துள்ளது தொழில் துறையினருக்கு பேரதிர்ச்சியை அளித்துள்ளது.

தமிழ்நாட்டில் உயரழுத்தப் பிரிவில் இடம் பெறும் தொழிற்சாலைகள், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் மின் பகிர்மானக் கழகத்திடமிருந்து மட்டுமல்லாமல், வெளிச் சந்தையிலிருந்தும் மின்சாரத்தை பெற்றுக் கொள்ள ஏற்கெனவே வழிவகை செய்யப்பட்டுள்ளது. வெளிச் சந்தை மின்சாரத்தை எடுத்துவர தமிழ்நாடு மின்சார வாரியத்தின் வழித்தடம் பயன்படுத்தப்படுவதால், அதற்கான கட்டணத்தை தொழில் நிறுவனங்கள் செலுத்த வேண்டும்.

இதன்படி, யூனிட் ஒன்றிற்கு ஒரு ரூபாய் 96 காசுகள் செலுத்தப்படுகிறது. இந்த நிலையில், ஒரு யூனிட்டிற்கு 34 காசுகள் மேல் வரி வசூலிக்க தமிழ்நாடு மின்சார வாரியம் முடிவு செய்துள்ளதாகவும்,

இதற்கான அனுமதியை தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்திடம் கோரியுள்ளதாகவும் செய்தி வந்துள்ளது.

ஏற்கெனவே ஆண்டுதோறும் மின் கட்டணம் உயர்த்தப்படுவதன் காரணமாக தொழில் நிறுவனங்கள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ள நிலையில், தி.மு.க. அரசின் மேல் வரி நடவடிக்கை என்பது தொழில்துறையை நசுக்குவதற்குச் சமம். இது தான் தொழில் துறையை நலிவிலிருந்து மீட்பதற்கான நடவடிக்கையா?.

ஒருவேளை வாக்குறுதிக்கு முரணாக செயல்படுவதுதான் 'திராவிட மாடல்' போலும்.

இதனை தி.மு.க. அரசு நடைமுறைப்படுத்துமேயானால், தொழில் துறை நலிந்துவிடுவது மட்டுமல்லாமல், தொழிலாளர்களுக்கும் வேலை பறிபோகும் சூழ்நிலை உருவாகும்.

இது தவிர, அரசாங்கத்தின் வருமானமும் குறையக்கூடும்.

எனவே, முதல்அமைச்சர் அவர்கள் இதில் உடனடியாகத் தலையிட்டு, தொழில் துறையினரின் நலனையும், தொழிலாளர்களின் நலனையும் கருத்தில் கொண்டு, மின்சாரத்தை வெளிச்சந்தையிலிருந்து பெறும் நிறுவனங்கள் மீது கூடுதலாக 34 காசுகள் மேல்வரி விதிப்பதை கைவிட வேண்டுமென்று அண்ணா திராவிட முன்னேற்றக் கழக தொண்டர்கள் உரிமை மீட்புக் குழுவின்சார்பில் வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறேன். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# உள்ளாடைகள் திருட்டு... ஆபாச பேச்சு... கல்லூரி மாணவிக்கு தொல்லை கொடுத்த தொழிலாளி

கோவை, மே. 29

கோவையை சேர்ந்தவர் முருகன் (வயது 54), கட்டிட தொழிலாளி. இவருடைய மனைவி ஒரு ஆண்டுக்கு முன்பு இறந்து விட்டார். அதன்பிறகு அவர் குடிப்பழக்கத்துக்கு அடிமையானதாக தெரிகிறது. இந்த நிலையில் அவருக்கு எம்.எஸ்சி. படித்து வரும் 24 வயதான கல்லூரி மாணவியுடன் பழக்கம் ஏற்பட்டது. முதலில் நன்றாக பேசி வந்த முருகன், நாட்கள் செல்லச் செல்ல மாணவியிடம் ஆபாசமாக பேசியதாக தெரிகிறது. எனவே அந்த மாணவி, முருகனுடன் பேசுவதை தவிர்த்து வந்தார். மேலும் மாணவி வீட்டை விட்டு வெளியே வரும் போது முருகன் ஆபாசமாக பேசுவது, சைகை காட்டுவது போன்ற செயலில் ஈடுபட்டு வந்தார். இதை அந்த மாணவி கண்டித்து உள்ளார். ஆனாலும் அவர் பொருட்படுத்தாமல் தொடர்ந்து தொல்லை கொடுத்து வந்தார்.

இது பற்றி அந்த மாணவி, தனது பெற்றோரிடம் கூறினார். உடனே அவர்கள் கொடுத்த புகாரின் பேரில் ஆர்.எஸ்.புரம் போலீசார் வழக்குப்பதிவு செய்து முருகனை கைது செய்தனர். போலீசார் நடத்திய விசாரணையில் முருகன், அடிக்கடி குடித்து விட்டு அந்த மாணவியிடம் ஆபாசமாக பேசி தொல்லை கொடுத்தது தெரிய வந்தது.

மேலும் அவர், மாணவியின் உள்ளாடைகளை திருடி துண்டு துண்டாக வெட்டி வீட்டில் பதுக்கி வைத்து இருந்ததும் தெரியவந்தது. இதை தொடர்ந்து போலீசார் முருகனை கோர்ட்டில் ஆஜர் படுத்தி கோவை மத்திய சிறையில் அடைத்தனர். இந்த சம்பவம் அப்பகுதியில் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

# பெங்களூரு கோவை எக்ஸ்பிரஸ் ரெயிலுக்கு கூடுதல் நிறுத்தம்: தெற்கு ரெயில்வே அறிவிப்பு

சேலம், மே. 29

கச்சிகுடா மங்களூரு சென்ட்ரல் எக்ஸ்பிரஸ் ரெயில் (வண்டி எண்12789) மற்றும் மங்களூருகச்சிகுடா எக்ஸ்பிரஸ் ரெயில் (வண்டி எண்12790) சேலம் வழியாக வாரம் இருமுறை இயக்கப்பட்டு வருகின்றன. இந்த ரெயில் கேரள மாநிலம் நைல்ஸ்வேர் ரெயில் நிலையத்தில் தற்போது சோதனை அடிப்படையில் நின்று செல்லும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. அதேபோல், கே.எஸ்.ஆர்.பெங்களூருகோவை உதய் டபுள் டக்கர் எக்ஸ்பிரஸ் ரெயில் (வண்டி எண்22665) மற்றும் கோவை கே.எஸ்.ஆர். பெங்களூரு எக்ஸ்பிரஸ் ரெயில் சோதனை அடிப்படையில் திருப்பத்தூர் ரெயில் நிலையத்தில் நின்று செல்லும். மறு உத்தரவு வரும் வரை இந்த 2 ரெயில்களும் நைல்ஸ்வேர், திருப்பத்தூர் ஆகிய ரெயில் நிலையங்களில் நின்று செல்லும் என சேலம் ரெயில்வே கோட்ட அலுவலகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நமது தின கனி

Title-Code:-TNTAM24615
R.Dis No:- 968/2023

29.5.2024

# செக்டு ஷர்ட், கியூட் லுக்கில் அஜித் குமார் வைரலாகும் புதிய புகைப்படங்கள்



திரையுலகின் முன்னணி நடிகர் அஜித் குமார். துணிவு படத்தைத் தொடர்ந்து இவர் தற்போது விடாமுயற்சி மற்றும் குட் பேட் அக்லி என இரண்டு படங்களில் நடித்து வருகிறார். ஆதிக் ரவிச்சந்திரன் இயக்கத்தில் உருவாகும் குட் பேட் அக்லி படத்தின் ஃபர்ஸ்ட் லுக் போஸ்டர் சமீபத்தில் வெளியானது.

இந்த போஸ்டருக்கு கலவையான விமர்சனங்கள் கிடைத்தது. குட் பேட் அக்லி திரைப்படம் 2025 ஆண்டு பொங்கல் பண்டிகையை ஒட்டி வெளியாகும் என படக்குழு அதிகாரப்பூர்வமாக அறிவித்தது. மேலும், இந்த படத்தின் ஃபர்ஸ்ட் லுக் போஸ்டரை தொடர்ந்து, நடிகர் அஜித் குமார் தனது ரசிகர்களுடன் எடுத்துக் கொண்ட புகைப்படங்கள் வெளியாகின.

இந்த நிலையில், அஜித் குமாரின் புதிய புகைப்படங்கள் சமூகவலைதளங்களில் வெளியாகி உள்ளன. கட்டம் போட்ட சட்டையில், சிரித்த முகத்துடன் காணப்படும் அஜித்தின் புதிய புகைப்படங்கள் தற்போது சமூக வலைதளங்களில் வைரல் ஆகி வருகிறது.

# விவாகரத்து குறித்த வதந்திகளுக்கு முற்றுப்புள்ளி வைத்த நடிகை நமிதா!



தமிழ் திரையுலக ரசிகர்களை 'ஹாய் மச்சான்' என அழைத்து ஏராளமான ரசிகர்களை கவர்ந்தவர் நமீதா. நடிகை நமிதா, கடந்த 2004 இல் கேப்டன் விஜயகாந்த் நடிப்பில் வெளியான எங்கள் அண்ணா திரைப்படத்தின் மூலம் தமிழ் சினிமாவில் நடிகையாக காலடி எடுத்து வைத்தவர். விஜயகாந்த், சரத்குமார், விஜய், அஜித் உள்பட முன்னணி நடிகர்களுக்கு ஜோடியாக நடித்துள்ள நமீதாவுக்கு தனி ரசிகர்கள் கூட்டம் உள்ளது. இந்நிலையில் கடந்த 2017ம் ஆண்டு வீரேந்திர சவுத்ரி என்பவரை நமீதா திருமணம் செய்து கொண்டார். அவர்களுக்கு இரட்டைக் குழந்தைகள் உள்ளனர். குடும்பத்தை கவனித்துக் கொண்டு சினிமா நடிப்புக்கு இடைவெளிவிட்ட நிலையில் பாரதீய ஜனதா கட்சியில் இணைந்து அரசியல் பணிகளில் ஈடுபட்டு வருகிறார். இந்நிலையில் நமீதாவும் அவரது கணவரும் பிரிய இருப்பதாக தகவல்கள் பரவியது. இதுபற்றி நமீதா கூறியதாவது: நானும் என் கணவரும் பிரிய இருப்பதாக வதந்தி பரவி இருப்பது சில தினங்களுக்கு முன்புதான் எனக்கு தெரியும். இதையடுத்து நான் என் கணவருடன் இருக்கும் புகைப்படங்களை வெளியிட்டு இருந்தேன். அப்படி இருந்தும் வதந்தி நிற்பது போல் தெரியவில்லை. சினிமாவில் ஏராளமான வதந்தியை பார்த்து விட்டதால் இதை ஒரு பொருட்டாக நினைக்கவில்லை. வதந்திகளை பார்த்து கணவரும் நானும் சிரித்து கொண்டோம். இவ்வாறு அவர் கூறினார்.

# `அஞ்சாமை' டிரைலர் இன்று வெளியாகிறது

டிரீம் வாரியர் பிக்சர்ஸ் தயாரிக்கும் புதிய படத்தின் ஃபர்ஸ்ட் லுக் போஸ்டர் சமீபத்தில் வெளியானது. விதார்த் நடிப்பில் உருவாகி இருக்கும் இந்த படத்திற்கு "அஞ்சாமை" என தலைப்பிடப்பட்டுள்ளது. எஸ்.பி. சுப்புராமன் இயக்கும் இந்த படத்தில் வாணி போஜன் கதாநாயகியாக நடித்துள்ளார்.

அஞ்சாமை படத்தின் ஃபர்ஸ்ட் லுக் போஸ்டரில் விதார்த், வாணி போஜன் குழந்தைகளுடன் அமர்ந்து இருக்கும் புகைப்படமும், இவர்களின் பின்னணியில் நீட் கொடுமையை எடுத்துரைக்கும் செய்தி அடங்கிய செய்தி தாள் தீயில் எரியும் படமும் இணைக்கப்பட்டு இருந்தது. இந்த படம் ஜூன் மாதம் வெளியாகும் என அறிவிக்கப்பட்டு இருக்கிறது.

இப்படத்திற்கு ராகவ் பிரசாத் இசையமைத்துள்ளார். ஒளிப்பதிவு பணிகளை கார்த்திக் மேற்கொள்ள, படத்தொகுப்பு பணிகளை ராம்சுதர்சன் மேற்கொண்டுள்ளார். ஜி.சி. ஆனந்தன் கலை இயக்குநராக பணியாற்றி உள்ளார். இப்படத்தின் பாடல்களை அறிவுமதி, கார்த்திக் நேத்தா, எஸ்.பி. சுப்புராமன் மற்றும் அருண் பாரதி ஆகியோர் எழுதியுள்ளனர்.

இப்படத்தின் டிரைலர் நாளை மாலை 5 மணிக்கு வெளியிடவுள்ளதாக படக்குழுவினர் அறிவித்துள்ளனர். படம் நீட் பரிச்சையின் மூலம் மாணவர்கள் எவ்வாறு பாதிக்கப்படுகின்றனர். தற்பொழுது சூழ்நிலையில் கல்வி எப்படி வியாபாரமாக்கப் படுகிறது என்பதை மையமாக எடுக்கப்பட்டுள்ள திரைப்படமாகும் என இயக்குனர் எஸ்.பி சுப்புராமன் கூறியுள்ளார்.




# 4 வாரங்கள் கடந்தும் தொடர்ந்து வெற்றிநடைப்போடும் அரண்மனை 4




தமிழ் சினிமாவில் அடுத்து வளர்ந்துக் கொண்டு வரும் ஃப்ரான்சிஸ் படமாக அரண்மனை வளர்ந்து வருகிறது, ஹாரர் கதைக்களத்தை மையமாக வைத்து சுந்தர் சி அரண்மனை1 படத்தை 2014 ஆம் ஆண்டு இயக்கினார். அப்படத்தின் வெற்றியை தொடர்ந்து அடுத்த இரண்டு பாகத்தை இயக்கினார்.

இதன் மாபெரும் வெற்றிக்கு பிறகு அடுத்ததாக அரண்மனை 4 திரைப்படத்தை இயக்கியுள்ளார் சுந்தர் சி. இந்த படத்தில் சுந்தர். சிக்கு தங்கையாக தமன்னா நடிக்க, தமன்னாவிற்கு ஜோடியாக சந்தோஷ் பிரதாப் நடித்துள்ளார். மேலும் இவர்களுடன் இணைந்து ராஷி கண்ணா, யோகி பாபு, கோவை சரளா உள்ளிட்ட பலரும் நடித்துள்ளனர். மேலும் பாடல் ஒன்றுக்கு குஷ்பு மற்றும் சிம்ரன் ஆகிய இருவரும் நடனமாடியுள்ளனர்.

இந்த படமானது கடந்த மே 3ஆம் தேதி உலகம் முழுவதும் திரையிடப்பட்டது. வெளியான முதல் நாளிலிருந்தே பாசிட்டிவான விமர்சனங்களை பெற்று வருகிறது. அந்த வகையில் கிட்டத்தட்ட 100 கோடிக்கும் அதிகமாக வசூல் செய்து சாதனை படைத்து வருகிறது. அதுமட்டுமில்லாமல் இந்த படம் 2024 ஆம் ஆண்டின் பிளாக்பஸ்டர் லிஸ்டில் இணைந்த முதல் தமிழ் திரைப்படம் என்பது குறிப்பிடத்தக்கது.

ஏனென்றால் சமீப காலமாக பல மலையாள திரைப்படங்கள் அசால்டாக நூறு கோடியை தட்டி தூக்கி சென்ற நிலையில், அரண்மனை 4 திரைப்படம் 2024 ஆம் ஆண்டின் முதல் பிளாக்பஸ்டர் ஹிட் அடித்த தமிழ் திரைப்படம் என்ற பெருமையை பெற்றுள்ளது.

மேலும் கோடை விடுமுறை என்பதால் ரசிகர்கள் குடும்பத்துடன் அரண்மனை 4 திரைப்படத்தை காண திரையரங்குகளுக்கு திரண்டு வருகின்றனர். அதன்படி தற்போது இந்த படம் 25 நாட்களையும் நெருங்கி உள்ளதாக படக்குழுவினர் புதிய போஸ்டர் ஒன்றை வெளியிட்டு அறிவித்துள்ளனர். படம் தமிழ் , தெலுங்கு மொழியில் வெளியாகி நல்ல வரவேற்பை பெற்ற நிலையில் படத்தை இந்தியிலும் வெளியிட படக்குழுவினர் திட்டமிட்டுள்ளனர் அதற்கான டிரைலரையும் இன்று வெளியிட்டனர்.

ஸ்டார், பிடி சார், ரசவாதி போன்ற படங்களும் கடந்த சில வாரங்களில் வெளியாகி இருந்தாலும், அரண்மனை 4 திரைப்படமும் அதற்கு இணையாக போட்டி போட்டு வசூலளித்து வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது.



# விஜய்யுடன்... SAC வெளியிட்ட புகைப்படம் வைரல்

கடந்த மாதம் படத்தின் முதல் பாடலான விசில் போடு என்ற பாடல் விஜய் பாடி வெளியாகி மிக வைரலாகியது, படத்தில் அடுத்த பாடல் ஜூன் மாதம் வெளியிடப் போவதாக தகவல் வெளியாகியது.

இந்நிலையில் விஜய் அவர் பெற்றோரான எஸ்.ஏ. சந்திரசேகர் மற்றும் சோபா சந்திரசேகருடன் இணைந்து எடுத்துக் கொண்ட புகைப்படம் சமூக வலைத்தளங்களில் வைரலாகி வருகிறது. நீண்ட நாட்கள் கழித்து விஜய் தன் பெற்றோருடன் இருக்கும் புகைப்படத்தை பார்த்த ரசிகர்கள் மிகவும் சந்தோஷத்தில் இருக்கின்றனர்.

கடந்த 2020 ஆம் ஆண்டு விஜய் க்கும் அவரது தந்தையான சந்திரசேகர் இருவருக்கும் விஜய் அரசியல் வருவது குறித்தான கருத்து வேறுபாடுகள் நிலவியது. ஆனால் தற்பொழுது விஜய் அரசியலில் களம் இறங்கியுள்ளார். அவருக்கென தமிழக வெற்றி கழகம் என்ற கட்சியை தொடங்கியுள்ளார்.

இந்நிலையில் விஜய் அவருடைய பெற்றோருடன் எடுத்த புகைப்படம் வைரலாகி வருகிறது.

# டி20 கிரிக்கெட் விளையாடும் விதத்தையே நீங்கள் மாற்றியுள்ளீர்கள்: பாராட்டிய காவ்யா மாறன்



ஐபிஎல் தொடரின் இறுதிப்போட்டி சென்னை சேப்பாக்கத்தில் இன்று நடைபெற்றது. இதில் டாஸ் வென்று முதலில் பேட்டிங் செய்த ஐதராபாத் அணி 18.3 ஓவரில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 113 ரன்கள் எடுத்தது. இதனையடுத்து விளையாடிய கொல்கத்தா அணி 10.3 ஓவரில் 2 விக்கெட்டுகளை மட்டும் இழந்து 114 ரன்கள் எடுத்து ஐபிஎல் கோப்பையை வென்றது.

அப்போட்டியை நேரில் கண்டு ரசித்த ஐதராபாத் அணியின் உரிமையாளர் காவ்யா மாறன், ஹைதராபாத் அணியின் தோல்வியை கண்டு கண்ணீர்விட்டு அழுதார். அதைமறைத்து சிரித்தபடியும் அவரது அணியின் வீரர்களுக்கு கைதட்டி வரவேற்றார்.

அதன் பிறகு ஹைதராபாத் அணி வீரர்களை டிரஸ்ஸிங் ரூமில் சந்தித்த அவர் வீரர்களுக்கு உத்வேகம் ஊட்டினார்.

அதில், "நீங்கள் அனைவரும் எங்களை மிகவும் பெருமைப்படுத்தியுள்ளீர்கள். அதை உங்களிடம் கூறவே நான் இங்கு வந்தேன். டி20 கிரிக்கெட் விளையாடும் விதத்தை நீங்கள் மாற்றியுள்ளீர்கள். இன்று எல்லாரும் நம்மை பற்றி பேசுகிறார்கள். எல்லா நாளும் நமக்கு வெற்றி கிடைப்பதில்லை. ஆனாலும் நீங்கள் அருமையாக விளையாடினீர்கள். உங்கள் அனைவருக்கும் மிக்க நன்றி, நீங்கள் எங்களை பெருமைப்படுத்தியுள்ளீர்கள்" என்று பேசியுள்ளார்.

இந்த வீடியோ சமூக வலைத்தளங்களில் வைரலாகி வருகிறது.

# எங்க போனாலும் எடுத்துட்டு போவேன் ஐ.பி.எல். கோப்பையுடன் ஸ்ரேயஸ் அய்யர்



ஐ.பி.எல். 2024 கிரிக்கெட் தொடரில் கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணி மூன்றாவது முறையாக கோப்பையை வென்று அசத்தியது. சென்னை சேப்பாக்கம் மைதானத்தில் நடைபெற்ற இந்த போட்டியில் கொல்கத்தா அணி எட்டு விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்று அசத்தியது. மூன்றாவது முறை கோப்பையை வென்ற கொல்கத்தா அணி வீரர்கள் கொண்டாட்டத்தில் ஈடுபட்டனர். அந்த வகையில், கொல்கத்தா அணியின் கேப்டன் ஸ்ரேயஸ் அய்யர் ஐ.பி.எல். கோப்பையுடன் நீச்சல் குளத்தில் இருக்கும் புகைப்படத்தை பதிவிட்டுள்ளார். இது தொடர்பான பதிவில், "எங்கு சென்றாலும் எடுத்து செல்வேன்," என தலைப்பிடப்பட்டு இருக்கிறது.

பிரபல கால்பந்து வீரர் மெஸ்ஸி உலகக் கோப்பையை வென்றதும் கொண்டாடியதை போன்றே கொல்கத்தா அணியின் கேப்டன் ஸ்ரேயஸ் அய்யர் கொண்டாட்டத்தில் ஈடுபட்டார். அந்த வரிசையில், தற்போது எங்கு சென்றாலும் கோப்பையுடன் செல்வேன் என்ற பாணியி

# ஒருநாள் கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு பெறுவதாக மிட்செல் ஸ்டார்க் சூசகம்



ஆஸ்திரேலிய அணியின் இடது கை வேகப்பந்து வீச்சாளர் மிட்செல் ஸ்டார்க். தனது துல்லியமான யார்க்கர் மற்றும் ஸ்விங் பந்துகளால் பேட்ஸ்மேன்களை திணறடிக்கக் கூடியவர். பிரான்சிஸ் உரிமையாளர்கள் (ஐபிஎல் அணி உரிமையாளர்கள்) கோடிக்கணக்கில் பணம் கொடுத்து இவரை ஏலத்தில் எடுக்கதயாராக இருந்தனர். இருந்தபோதிலும் நாட்டிற்காக விளையாடுவதே முக்கியம் எனக் கூறி ஐபிஎல் கிரிக்கெட்டை தவிர்த்து வந்தார்.


இவர் 2014 மற்றும் 2015ல் மட்டுமே விளையாடியுள்ளார். இந்த வருடம் டி20 உலகக் கோப்பை கிரிக்கெட் தொடர் நடப்பதையொட்டி ஐபிஎல் தொடரில் முழுவதுமான இடம் பெறுவேன் என அறிவித்தார். இதனால் கொல்கத்தா அணி 24.75 கோடி ரூபாய் கொடுத்து ஸ்டார்க்கை ஏலம் எடுத்தது. அப்போது இவருக்கு இவ்வளவு தொகையா? என விமர்சனம் எழுந்தது. விமர்சனத்திற்கு பதில் கொடுக்கும் விதமான குவாலிபைய1 மற்றும் இறுதிப் போட்டியில் சிறப்பாக பந்து வீசி அசத்தினார். இரண்டு போட்டிகளிலும் ஆட்ட நாயகன் விருதை வென்றார். இதனால் அடுத்த வருடமும் விளைாடுவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இது தொடர்பாக அவரிடம் கேள்வி எழுப்பும் போது பிரான்சிஸ் போட்டிகளில் விளையாட வேண்டுமென்றால் அதற்காக ஒருநாள் கிரிக்கெட் இருந்து ஓய்வு பெற வேண்டிய நிலை ஏற்படும் என சூசகமாக தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக மிட்செல் ஸ்டார்க் கூறியதாவது:

கடந்த 9 ஆண்டுகளாக நான் ஆஸ்திரேலியா கிரிக்கெட்டிற்கு முன்னுரிமை கொடுத்து வந்தேன். இதற்காக என்னுடைய உடலுக்கு ஓய்வு கொடுக்கவும், மனைவியுடன் நேரத்தை செலழிக்கவும் எனக்கு நானே வாய்ப்பு கொடுத்துக் கொண்டேன். இதனால் கடந்த 9 ஆண்டுகளாக ஆஸ்திரேலியா கிரிக்கெட் மட்டுமே கவனத்தில் இருந்தது. பிரான்சிஸ் கிரிக்கெட்டில் விளையாடுவதை தவிர்த்து வந்தேன். நான் தற்போது எனது கிரிக்கெட் வாழ்க்கையின் தொடக்கத்தை விட முடிவு கட்டத்தில் உள்ளேன். ஒரு விடிவிலான கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு பெறலாம். அடுத்த ஒருநாள் கிரிக்கெட் தொடருக்கு முன்னதாக நீண்ட காலம் உள்ளது. இது எனக்கு தொடர்கிறதோ... இல்லையோ... இது அன்னும் அதிகப்படியான பிரான்சிஸ் கிரக்கெட்டிற்கு வழி வகுக்கும். அடுத்த வருடம் சரியான போட்டி அட்டவணை எனக்குத் தெரியாது. இருந்தபோதிலும் அடுத்த வருடத்தை எதிர்பார்த்து கொண்டிருக்கிறேன். அடுத்த வருடமும் கொல்கத்தா அணிக்காக விளையாடுவேன் என்ற நம்பிக்கை உள்ளது.

இவ்வாறு மிட்செல் ஸ்டார்க் தெரிவித்துள்ளார்.



விழுப்பேற்றின் அஃதொப்ப தில்லையார் மாட்டும்
அழுக்காற்றின் அன்மை பெறின்

**விளக்கம்:**

யாரிடத்திலும் பொறாமை இல்லாதிருக்கப் பெற்றால், ஒருவன் பெறத்தக்க மேம்பாடான பேறுகளில் அதற்கு ஒப்பானது வேறொன்றும் இல்லை.

நமது தினகனி
செய்திகள் மற்றும்
விளம்பரங்கள் தொடர்புக்கு:
94436 99066
www.dhinakani.com
Canara Bank Account : 120028528266
IFSC code : CNRB0001041

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 63815.1. Editor: KANI RAJA V.